சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. Mcop.21/2016

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 12ம் நாள் புதன்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எ.ம.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி. சித்ரா கிரேட் 2 பென்ஞ் கிளார்க் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கே.முருகன் | தொழில் | நேஷ்னல் இன்சூரன்ஸ் கம்பெனி வேலூர், முதுநிலை உதவியாளர் |
| கணவர் பெயர் | கண்ணன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

**<u>12.07.2023 முதல் விசாரணை</u>**

1, நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில்முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். வந்தவாசி தெற்குகாவல் நிலைய குற்ற எண்.46/2016 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகல் **எ.ம.சா.ஆ.1,** விசாரணை அறிக்கை 10.02.2020 தேதியிட்டது **எ.ம.சா.ஆ.2,** வந்தவாசி தெற்குகாவல் நிலைய குற்ற எண்.46/2016 ன்எப்.ஐ ஆர் ஸ்டேட்டஸ் ரிப்போர்ட் **எ.ம.சா.ஆ.3** தாக்கல் செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த வந்தவாசி தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஜெயசந்திரன் என்பவரை விசாரணை செய்தேனா என்றால் இதற்கு பின்னர் தான் அவரை விசாரணை செய்ய உள்ளேன்.

2. சம்பவ இடம் வந்தவாசி டூ காஞ்சிபுரம் ரோட்டில் உள்ள கிரீன்பார்க் பள்ளி அருகில் உள்ளது. நான் கிரீன்பார்க் பள்ளி நிர்வாகிகள் யாரையேனும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 25 AT 5685 என்ற வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்த முகேஷ் என்பவர் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வாகனத்தை முகேஷ் என்பவரின் அண்ணன் நிரஞ்சன் தான் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். முகேஷ் தன்னை காப்பாற்றிக்கொள்ளவும் தன் அண்ணனை காப்பாற்றிக்கொள்ளவும் பொய்யாக கூட புகார் கொடுத்திருக்கலாம் என்றால் சரியல்ல.

3. எங்கள் காப்பீட்டு நிறுவனத்தின் சார்பில் நியிமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி கிரீன்பார்க் பள்ளி நிர்வாகிகள் அல்லது அங்கு வேலை செய்பவர்கள் யாரையும் விசாரித்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்று தெரிய வந்ததா என்றால் இல்லை.

4. விபத்தில் இறந்துபோன ஆனந்தன் என்பவர் விபத்து சமயத்தில் போன் பேசிக்கொண்டு சென்றதால் விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் ஆனந்தன் சம்பவ நேரத்தில் பயன்படுத்திய செல்போன் எண் மற்றும் டவர் லொகேஷன் குறித்த விவரங்கள் ஏதேனும் சேகரிக்கப்பட்டதா என்றால் இல்லை.

5. சம்பவ நேரத்தில் விபத்தில் இறந்துபோன ஆனந்தன் தான் மட்டும்தான் TN 07 BW 9641 என்ற வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் முகேசம் நிரஞ்சன் தங்கள் வாகனத்தில் கிரிக்கெட் மேட்ச் பார்ப்பதற்காக வேகமாக சென்றார்கள் என்றால் இல்லை. அவ்வாறு அவர்கள் வேகமாக சென்றார்கள் என்பதை விசாரணை அதிகாரி தெரிந்து கொண்டாரா என்றால் இல்லை.

6. விபத்து சமயத்தில் ஆனந்தன் தனது வாகனத்தில் தென்னாங்கூர் சென்றுவிட்டு வரும்போது முகேசம், நிரஞ்சனும் கிரிக்கெட் மேட்ச் பார்க்க வேண்டுமென்பதற்காக வேகமாக வாகனத்தை ஓட்டி வந்து கிரீன் பார்க் பள்ளி அருகில் ஆனந்தனின் வாகனத்தின் மீது மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் இல்லை.

7. விபத்து நடந்தவுடன் முகேசம் நிரஞ்சனும் தங்கள் சமுதாய மக்களை அழைத்து வந்து காவல் நிலையத்தில் கேரோ செய்ததால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும் மேற்சொன்ன காரணத்திற்காக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)